முருகப்பெருமான் துணை

**மகான் நந்தீஸ்வரர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.03.2024**, சனிக்கிழமை

1. நேசக்கரம் பட உலகோர்க்கு
நீதிநெறி புகட்டி வாழ்வில்
ஆசாபாசம் ஆணவ மலம் கடந்து
அழியாமை பெறும் ஞான வழிதனை
2. வழிதனை மக்களுக்கு அருளும்
வள்ளலே ஆறுமுக அரங்கனே
வழிமொழிந்து உன் பெருமை கூறி
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை சோபகிருது சால்திங்கள்
அய்யைந்தோர் திகதி காரி வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 26 ம் நாள், 09.03.2024, சனிக்கிழமை)
ஆசிதனை நந்தீஸ்வரர் யானும்
அகிலமே வளம் பெற உரைப்பேன்
4. உரைக்கவே பண்பான சமூகமாக
உலகம் உயர்வுபெற வேண்டி
மறையாக அரங்கன் தருகின்ற
மகா உபதேசங்கள் தானும்
5. தானுமே கலியுகமக்கள் தனை
தானென்ற சுயநலம் விட்டு
ஞானமாம் பொதுநல வழியில்
நம்பிக்கை வைத்து பயணிக்க
6. பயணிக்க பெருந்துணை புரியும்
பாரம்பரியம் குல வழக்கெனும்
உயிர்கொலை புரியும் செயல்முறை
ஊண் உண்ணும் வழிவகை விட்டு
7. விட்டுமே தயவுநெறிபட வாழ
விட்டுக்கொடுத்து மற்றவர்க்கு
கட்டம் போக்கும் சக்தியாக
கருணைபட வாழ வகைபுரியும்

8. வகைபுரியும் அரங்க மகானின்
வல்லமை கொண்ட சன்மார்க்கம்
பகை குரோத வஞ்சம் சூழ்ச்சி
பாதகமான குணக்கேடகற்றி

9. அகற்றி அனைவரும் சமம்
அகத்தியம் நிறைந்த வழியில்
மகத்துவம் கொண்ட மக்கள் நாம் எனும்
மாற்றம்பல செய்து கலியினில்

10. கலியினில் மெய்ஞான பலம்
கடைநிலை யோனும் அடையும்படி
தெளிவூட்டி அரங்கரின் கரம்பட
தருகின்ற தீட்சை பலம் தானும்

11. தானுமே மாற்றங்கள் புரியும்
தன்னை அவரவரும் அறிந்துணர்ந்து
ஞானவானாக உலகசேமம் காத்து
ஞான ஆட்சியே உருவாக்க நேரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–